# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,241 — 1964 නොවැම්බර් 27 වැනි සිකුරාදා — 1964.11.27

14,241 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1958 ம் ஆண்டின் 12 ம் இலக்கத் தேயிலை பண உதவிச்சட்டம்**

1958 ம் ஆண்டின் 12 ம் இலக்கத் தேயிலை பண உதவிச் சட்டத்தின், 10 ம் பிரிவின் கீழ் விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1964 ம் ௵ நொவெம்பர் மீ 26 ந் ௳.

**ஒழுங்குவிதி**

1958 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ம் தேதிய 11,573 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தேயிலை பண உதவித் திட்ட ஊழியர்களின் சேமலாபநிதி 1958 ம் ஆண்டு ஒழுங்கு விதிகள், 1962 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 6 ம் தேதிய 13,007 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட திருத்தங்களின்பின், மேலும், பின்வருமாறு திருத்தியமைக்கப் படுகின்றன.

(1) 2 வது ஒழுங்கு விதியில்

"1958 ம் ஆண்டின் 12 ம் இலக்கச் சட்டத்தின் கீழ், அல்லது தேயிலை பண உதவித் திட்டத்தின் கீழ், சேவைக்கென நிலைமாற்றஞ் செய்யப்பட்ட" என்னும் எண்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பதிலாக "1958 ம் ஆண்டின் 12 ம் இலக்கச் சட்டத்தின் கீழ், அல்லது 1962 ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31 ம் தேதியன்று அல்லது அதற்கு முன்" என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்,

(2) 4 (i) வது ஒழுங்கு விதியில்

(i) "இவ்வொழுங்கு விதியின் (ii) வது பந்தியில் குறிப்பிட்டிருக்கும் உத்தியோகத்தர், அல்லது, சேவையாளர் தவிர்ந்த மற்றைய ஒவ்வொரு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு உத்தியோகத்தரும் அல்லது சேவையாளரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ii) பந்தி (ஈ) யில் "செயற்படுமிடத்து" என்ற சொல்லுக்குப் பதிலாக "செயற்படுமிடத்து அல்லது" என்ற சொற்றொடரை இடுவதன் மூலமும்.

(iii) (ஈ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை புகுத்துவதன் மூலமும்.

"(உ) 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம், 1 ம் தேதி தொடக்கமான சேவைக்கு, இளைப்பாற்றுச் சம்பள விதியின் கீழ், இளைப்பாற்றுச் சம்பளம் பெற விரும்புவதாக எழுத்துமூலம் தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்குத் தெரிவித்தவர் ஒருவர், அந்த தெரிவு செயற்படுமிடத்து", அத்துடன்

(iv) "இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாத சேவைக்கும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதச் சேவைக்கும், பந்தி "உ" வின் கீழ் தங்கள் விருப்பத்தின் மேல் தெரிவு செய்தவர்களுக்கு, 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் தேதி வரையும் ஆற்றிய சேவைக்காய பணிக்கொடை, ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதத்திற்கும் கணிக்கப்படும்" என்பதனை இடுவதன் மூலமும்.

(3) 4 வது ஒழுங்கு விதியின் (ii) ம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்.

"(ii) இவ் ஒழுங்கு விதிகளுக்கமைய பணிக்கொடை பெற அருகதையுடைய உத்தியோகத்தர் ஒருவர், இத்திட்டத்தின் கீழ் ஆற்றிய முழுச சேவைக் காலத்துக்கு, அல்லது 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதி ஆரம்பிக்கும் சேவைக் காலத்திற்கு இளைப்பாற்றுச் சம்பள விதிகளுக்கிணங்க, இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் விருப்பத்தைப் பிரயோகிக்கின் இவ் ஒழுங்கு விதிகள் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு எழுத்து மூலம் தெரிவு படுத்த வேண்டும்."

(4) 4 வது ஒழுங்கு விதியின் (ii) ம் பந்தியினை யுடனடுத்துப் பின்வரும் பந்திகளைப் புகுத்துவதன் மூலமும்.

"(iii) ஒழுங்குவிதி 4 (i) ன், பந்தி "உ" யில் குறிப்பிட்டபடி தனது விருப்பத்தைத் தேர்ந்தெடுத்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ, 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதிக்குப் பின் ஆற்றுகின்ற சேவைக்கு, இவ் ஒழுங்கு விதிகளின் கீழ் எவ்வித பணிக்கொடையும் பெறுவதற்கு தகுதியுடையவராகார்."

"(iv) இத்திட்டத்தின் கீழ் தனது முழுச் சேவைக் காலத்திற்கும் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ், இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தைத் தெரிவு செய்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ இவ் ஒழுங்கு விதிகளுக்கமைய எவ்வித பணிக்கொடைக்கும் தகுதியுடையவராகார்."

(5) 6 வது ஒழுங்கு விதியில்

"எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக, "இந்த ஒழுங்கு விதிகளுக்கமைய, பணிக்கொடை பெற தகுதியுடைய எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(6) 8 வது ஒழுங்கு விதியில்

(அ) " நிதியிலிருந்து 15,000/- அல்லது ஒரு தொகை " என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக " நிதியிலிருந்து ஒரு தொகை " என்ற சொற்றொடர்களை இடுவதன் மூலமும்.

(ஆ) " அந்த ஆண்டில்............, எந்த தொகை கூடுதலாக இருக்கின்றதோ " என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக " அந்த ஆண்டில் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(7) பின்வரும் புதிய ஒழுங்கு விதியைப் புகுத்துவதன் மூலமும்.

" 8 (அ) பின்வருபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியனவாய், தேயிலைப் பண உதவித் திட்ட ஊழியர்களின் சேமலாப நிதிக்கணக்கில் தேங்கிக் கிடக்கும் எத்தொகைகளும் திரும்பவும் தேயிலைப் பண உதவி நிதிக்கு மாற்றப்படலாம்.

(1) வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு, அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிராவிடின்,

(2) மரணமடைந்த உத்தியோகத்தரின் ஆதரவில் வாழ்பவருக்கு அத்தகைய மரணமடைந்த உத்தியோகத்தர் எவரேனும் அண்டி வாழ்பவரை விட்டுச் சென்றிருப்பின்,

(3) இத்திட்டத்தின் கீழ் ஆற்றுகின்ற முழுச் சேவைக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு, இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தைத் தெரிவு செய்து கொண்டவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு, அவ் உத்தியோகத்தர் அவ்விதம் தம் விருப்பத்தைத் தெரிந்திராவிடின்.

11—1149/1.

---

## 1953 ம் ஆண்டின் 36 ம் இலக்க இறப்பர் புனர் நடுகை பண உதவிச் சட்டம்

1953 ம் ஆண்டின் 36 ம் இலக்க இறப்பர் புனர் நடுகை பண உதவிச் சட்டத்தின் 8 ம் பிரிவின்கீழ் விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1964 ம் ஆண்டு நவம்பர் மீ 26 ந உ.

### ஒழுங்குவிதி

1958 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 18 ம் தேதிய 11,300 இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டுப்பின் காலத்துக்குக்காலம் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள இறப்பர் புனர்நடுகை பண உதவித்திட்ட ஊழியர்களின் சேமலாபநிதி 1958 ம் ஆண்டு ஒழுங்குவிதிகள், மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றன.

(i) 2 வது ஒழுங்குவிதியில்—

" 1953 ம் ஆண்டின் 36 ம் இலக்கச்சட்டத்தின் கீழ் அல்லது இறப்பர் புனர் நடுகை பண உதவித்திட்டத்தின்கீழ், சேவைக்கென நிலைமாற்றஞ் செய்யப்பட்ட " என்னும் எண்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பதிலாக " 1953 ம் ஆண்டின் 36 ம் இலக்கச்சட்டத்தின் கீழ் 1962 ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31 ம் தேதியன்று, அல்லது அதற்குமுன் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,

(2) 4 (i) வது ஒழுங்குவிதியில்—

(i) என்ற " இவ்வொழுங்குவிதியின் (ii) வது பந்தியில் குறிப்பிட்டிருக்கும் உத்தியோகத்தர், அல்லது சேவையாளர் தவிர்ந்த மற்றைய ஒவ்வொரு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் " என்னும் சொற்களுக்குப் பதிலாக ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவையாளரும் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ii) பந்தி " ஈ " யில் " செயற்படுமிடத்து " என்ற சொல்லுக்கு பதிலாக " செயற்படுமிடத்து ; அல்லது " என்ற சொற்றொடரை இடுவதன்மூலமும்,

(iii) " ஈ " என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை புகுத்துவதன் மூலமும்.

" " உ ", 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதி தொடக்கம் ஆற்றும் சேவைக்கு இளைப்பாற்றுச்சம்பள விதியின் கீழ், இளைப்பாற்றுச்சம்பளம் பெறவிரும்புவதாக எழுத்துமூலம் இறப்பர் கட்டுப்பாட்டதிகாரிக்கு தெரிவித்தவர் ஒருவர், அந்த தெரிவு செயற்படுமிடத்து."

(iv) " இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பூர்த்தியடைந்த ஒவ்வொரு மாதச்சேவைக்கும்" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக " இத்திட்டத்தின்கீழ் பூர்த்தியடைந்த ஒவ்வொரு மாதச் சேவைக்கும், பந்தி " உ " வின்கீழ், தங்கள் விருப்பத்தின் மேல் தெரிவு செய்தவர்களுக்கு, 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் தேதி வரையும் ஆற்றிய சேவைக்காய பணிக்கொடை, ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதத்திற்கும் கணிக்கப்படும்.", என்பதனை இடுவதன் மூலமும்,

(3) 4 வது ஒழுங்குவிதியின் (ii) ம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியினைப் புகுத்துவதன் மூலமும்,

" (2) இவ் ஒழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடைபெற அருகதையுடைய உத்தியோகத்தர் ஒருவர் இத்திட்டத்தின்கீழ ஆற்றிய முழுச்சேவைக் காலத்துக்கு, அல்லது 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதி ஆரம்பிக்கும் சேவைக்காலத்திற்கு இளைப்பாற்றுச்சம்பளவிதிகளுக்கிணங்க, இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் விருப்பத்தைப் பிரயோகிக்கின் இவ் ஒழுங்கு விதிகள் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தனது விருப்பத்தை இறப்பர் கட்டுப்பாட்டதிகாரிக்கு எழுத்து மூலம் தெரிவுபடுத்தவேண்டும்.

(4) 4 வது ஒழுங்குவிதியின் (ii) ம் பந்தியினையுடனடுத்துப் பின்வரும் பந்திகளை புகுத்துவதன் மூலமும்,

" (3) ஒழுங்குவிதி 4 (1) ன், பந்தி " உ " வில் குறிப்பிட்டபடி தனது விருப்பத்தை தேர்ந்தெடுத்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ, 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதிக்குப்பின் ஆற்றுகின்ற சேவைக்கு, இவ் ஒழுங்குவிதிகளின்கீழ் எவ்வித பணிக்கொடையும் பெறுவதற்கு தகுதியுடையவராகார். "

" (4) இத்திட்டத்தின்கீழ் தனது முழுச்சேவைக்காலத்திற்கும் இளைப்பாற்றுச்சம்பள விதிகளின்கீழ் இளைப்பாற்றுச்சம்பளம்பெற தனது விருப்பத்தை தெரிவு செய்த எந்த உத்தியோகத்தரோ, அல்லது சேவையாளரோ இப்பிரமாணங்களுக்கமைய எவ்வித பணிக்கொடைக்கும் தகுதியுடையவராகார். "

(5) 6 வது ஒழுங்குவிதி—

" எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ " என்ற சொற்றொடர்களுக்குப்பதிலாக " இவ் ஒழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடைபெற தகுதியுடைய எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ " என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

(6) 8 வது ஒழுங்குவிதியில்—

(அ) " நிதியிலிருந்து 15,000/- அல்லது ஒரு தொகை " என்ற சொற்றொடர்களுக்குப்பதிலாக " நிதியிலிருந்து ஒரு தொகை " என்று இடுவதன் மூலமும்,

(ஆ) " அந்த ஆண்டில் ..........., எந்த தொகை கூடுதலாக இருக்கின்றதோ ; " என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக " அந்த ஆண்டில். " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(7) பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளைப் புகுத்துவதன்மூலமும்.

" 8 (அ) , பின்வருபவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டியனவாய இறப்பர் புனர் நடுகைதிட்ட ஊழியர்களின் சேமலாபநிதிக் கணக்கில் தேங்கிக்கிடக்கும் எத்தொகைகளும் திரும்பவும் இறப்பர் புனர் நடுகை பண உதவி நிதிக்கு மாற்றப்படலாம்.

(1) வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு, அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிராவிடின்.

(2) மரணமடைந்த உத்தியோகத்தரின் ஆதரவில் வாழ்பவர்க்கு அத்தகைய மரணமடைந்த உத்தியோகத்தர் எவரேனும் அண்டிவாழ்பவரை விட்டுச் சென்றிருப்பின்.

(3) இறப்பர் புனர் நடுகைத்திட்டத்தின்கீழ் ஆற்றுகின்ற முழுச் சேவைக்கு, அல்லது அதன் ஒரு பகுதிக்கு இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தை தெரிவு செய்து கொண்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு, அவ்வுத்தியோகத்தர் அவ்விதம் தம் விருப்பத்தைத் தெரிந்திராவிடின்.

11—1149/2

எல். டி. பி. 44/57

## 1957 ம் ஆண்டின் 51 ம் இலக்கத் தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1957 ம் ஆண்டின் 51 ம் இலக்கத் தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 49 ம், 60 ம் பிரிவுகளின்கீழ், விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

எவ். ஆர். டி. பண்டாரநாயக்க,
விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1964 ம் ஆண்டு நவெம்பர் மீ 26 ந் உ.

### ஒழுங்குவிதி

1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் தேதிய 11,618 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1963 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ம் தேதிய 13,692 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறுள்ள தேயிலைக் கட்டுப்பாட்டுப் பகுதி (பணிக்கொடை நிதித்திட்டம்) 1958 ம் ஆண்டு ஒழுங்குவிதிகள் மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றன :—

(1) 2வது ஒழுங்குவிதியில்—

"1957 ம் ஆண்டின் 51 ம் இலக்கச் சட்டத்தின் கீழ் அல்லது தேயிலைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சேவைக்கென நிலைமாற்றஞ் செய்யப்பட்ட" என்னும் எண்களுக்கும் சொற்றொடர்களுக்கும் பதிலாக "1957 ம் ஆண்டின் 51 ம் இலக்கச் சட்டத்தின் கீழ் 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் தேதியன்று அல்லது அதற்குமுன்," என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்

(2) 4 (i) வது ஒழுங்குவிதியில்

(i) "இவ்வொழுங்கு விதியின் (ii) வது பந்தியில் குறிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர், அல்லது, சேவையாளர் தவிர்ந்த மற்றைய ஒவ்வொரு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவையாளரும்" என்னு சொற்களை இடுவதன் மூலமும்

(ii) பந்தி (ஈ) ல் "செயற்படுமிடத்து" என்ற சொல்லுக்குப் பதிலாக "செயற்படுமிடத்து ; அல்லது" என்ற சொற்றொடரை இடுவதன் மூலமும்

(iii) (ஈ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை புகுத்துவதன்மூலமும்.

"(உ) 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதி தொடக்கம் ஆற்றும் சேவைக்கு இளைப்பாற்றுச் சம்பளவிதியின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெறவிரும்புவதாக எழுத்துமூலம் தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு தெரிவித்தவர் ஒருவர் அந்த தெரிவு செயற்படுமிடத்து." அத்துடன்

(iv) "இப்பகுதியில் ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதச் சேவைக்கு" என்ற சொற்றொடருக்குப்பதிலாக இப்பகுதியில் ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதச் சேவைக்கும், பந்தி (உ) ன் கீழ் தங்கள் விருப்பத்தின் மேல் தெரிவு செய்தவர்களுக்கு, 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் தேதிவரையும் ஆற்றிய சேவைக்காய பணிக்கொடை, ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதத்திற்கும் கணிக்கப்படும்.

(3) 4 வது ஒழுங்குவிதின் (ii) வது பந்திக்குப்பதிலாக, பின்வரும் பந்திகளை புகுத்துவதன்மூலமும்

"(ii) இவ்வொழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடை பெற அருகதையுடைய ஒரு உத்தியோகத்தர் ஒருவர் இப்பகுதியில் ஆற்றிய முழுச்சேவைக்காலத்துக்கு, அல்லது, 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதிக்குப்பின் ஆரம்பிக்கும் சேவைக்காலத்திற்கு இளைப்பாற்றுச் சம்பள விதிகளுக்கிணங்க, இளைப்பாற்றுச் சம்பளம் பெற விரும்பினால், இவ்வொழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தனது விருப்பத்தை தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு எழுத்து மூலம் தெரிவு படுத்தவேண்டும்."

(4) 4 வது ஒழுங்குவிதியின் (ii) ம் பந்திகளையுடனடுத்துப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்

"(iii) ஒழுங்குவிதி 4 (i) ன், பந்தி (உ) யில் குறிப்பிட்டபடி தனது விருப்பத்தைத் தேர்ந்தெடுத்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ, 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்குப்பின் ஆற்றுகின்ற சேவைக்கு, இவ்வொழுங்குவிதிகளின் கீழ் எவ்வித பணிக்கொடையும் பெறுவதற்கு தகுதியுடையவராகார்."

"(iv) இப்பகுதியில் தனது முழுச் சேவைக்காலத்திற்கும் இளைப்பாற்றுச்சம்பள விதிகளின் கீழ், இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தை தெரிவு செய்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ இவ்வொழுங்குவிதிகளுக்கமைய எவ்வித பணிக்கொடைக்கும் தகுதியுடையவராகார்."

(5) 6 வது ஒழுங்குவிதியில்

"எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்ற சொற்றொடர்களுக்குப்பதிலாக "இவ்வொழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடைபெற தகுதியுடைய எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்று இடுவதன் மூலமும்

(6) 8 வது ஒழுங்குவிதியில்

(அ) "நிதியிலிருந்து 15,000/அல்லது ஒரு தொகை" என்ற சொற்றொடர்களுக்குப்பதிலாக "நிதியிலிருந்து ஒரு தொகை" என்ற சொற்றொடர்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) "அந்த ஆண்டில் . . . . . , எந்த தொகை கூடுதலாக இருக்கின்றதோ" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக "அந்த ஆண்டின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(7) பின்வரும் புதிய ஒழுங்குவிதியைப் புகுத்துவதன் மூலமும்—

"8 (அ) பின்வருபவர்களுக்கு கொடுக்கப்படவேண்டியனவாய பணிக்கொடை நிதிக்கணக்கில் தேங்கிக்கிடக்கும் எத்தொகைகளும் திரும்பவும் தேயிலைக் கட்டுப்பாட்டு நிதிக்கு மாற்றப்படலாம்.

(1) வேலைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் வேலைநீக்கஞ் செய்யப்பட்டிராவிடின்

(2) மரணமடைந்த உத்தியோகத்தரின் ஆதரவில் வாழ்பவருக்கு அத்தகைய மரணமடைந்த உத்தியோகத்தர் எவரேனும் அண்டி வாழ்பவரைவிட்டு சென்றிருப்பின்,

(3) இறப்பர் புனர் நடுகைத் திட்டத்தின்கீழ் ஆற்றுகின்ற முழுச் சேவைக்கு, அல்லது அதன் ஒரு பகுதிக்கு இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தை தெரிவு செய்துகொண்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வுத்தியோகத்தர் அவ்விதம் தம் விருப்பத்தைத் தெரிந்திராவிடின்.

11-1140/3

---

எல்.டி.—பி44/57.

## 1956 ம் ஆண்டின் 11 ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்

1956 ம் ஆண்டின், 11 ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 42 ம், 51 ம் பிரிவுகளின்கீழ், விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
விவசாய, உணவு, கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
1964 ந் ஆண்டு நவம்பர் மீ 26 ந் உ.

### ஒழுங்குவிதி

1957 மே 3 ம் தேதிய 11,114 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டுப் பினனர் காலத்துக்குக்காலம் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள இறப்பர் கட்டுப்பாட்டு பகுதி (பணிக்கொடைத்திட்ட) 1957 ம் ஆண்டு ஒழுங்குவிதிகள், மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றன.

(1) 2 வது ஒழுங்குவிதியில்—

"1956 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தின்கீழ், அல்லது இறப்பர் கட்டுப்பாட்டுப் பகுதியில், சேவைக்கென நிலைமாற்றஞ் செய்யப்பட்ட" என்ற எண்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பதிலாக "1956 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தின்கீழ் 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர்" என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

(2) 4(1) ம் ஒழுங்குவிதியில்—

(1) "இவ்வொழுங்குவிதியின் ii வது பந்தியில் குறிப்பிட்டிருக்கும் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் தவிர்ந்த மற்றைய ஒவ்வொரு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவையாளரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) பந்தி ஈ யில் "செயற்படுமிடத்து" என்ற சொல்லுக்குப் பதிலாக "செயற்படுமிடத்து அல்லது" என்ற சொற்றொடரை இடுவதன் மூலமும்,

(3) ஈ என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை புகுத்துவதன் மூலமும்,

"உ", 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம், 1 ம் தேதி தொடக்கம் ஆற்றும் சேவைக்கு இளைப்பாற்றுச் சம்பளவிதியின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெறவிரும்புவதாக எழுத்துமூலம், றப்பர் கட்டுப்பாட்டதிகாரிக்கு தெரிவித்தவரும், அந்த தெரிவு செயற்படுமிடத்தும்."

(4) "இப்பகுதியில் பூர்த்தியடைந்த ஒவ்வொரு மாதச் சேவைக்கும்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக "இப்பகுதியில் பூர்த்தியடைந்த ஒவ்வொரு மாதச் சேவைக்கும் பந்தி "உ" வின்கீழ், தங்கள் விருப்பத்தின்மேல் தெரிவுசெய்தவர்களுக்கு, 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிவரையும் ஆற்றிய சேவைக்காய பணிக்கொடை, ஒவ்வொரு பூர்த்தியடைந்த மாதத்திற்கும் கணிக்கப்படும்", என்பதனை இடுவதன் மூலமும்,

(3) 4 வது ஒழுங்கு விதியின் (ii) ம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்—

"(ii) இவ்வொழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடை பெற அருகதையுடைய உத்தியோகத்தர், இப்பகுதியில் ஆற்றிய முழுச்சேவைக் காலத்துக்கு, அல்லது 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் தேதிக்குப்பின் ஆரம்பிக்கும் சேவைக்காலத்திற்கு இளைப்பாற்றுச்சம்பள விதிகளுக்கிணங்க, இளைப்பாற்றுச் சம்பளம் பெறவிரும்பினால், இவ்வொழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தனது விருப்பத்தை றப்பர் கட்டுப்பாட்டதிகாரிக்கு எழுத்துமூலம் தெரிவுபடுத்த வேண்டும்.

(4) 4 வது ஒழுங்குவிதியின் (ii) ம் பந்தியினையுடனடுத்துப்பின் வரும் பந்திகளை இடுவதன் மூலமும்—

(iii) "ஒழுங்குவிதி 4(1) ன் பந்தி "உ" வின் குறிப்பிட்டபடி தனது விருப்பத்தை தேர்ந்தெடுத்த எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ, 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதிக்குப்பின் ஆற்றுகின்ற சேவைக்கு, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் எவ்வித பணிக்கொடையும் பெறுவதற்கு தகுதியுடையவராகார்",

(iv) இப்பகுதியில் தனது முழுச் சேவைக்காலத்திற்கும் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளம் பெற தனது விருப்பத்தை தெரிவு செய்த எந்த உத்தியோகத்தரோ, அல்லது சேவையாளரோ இவ்வொழுங்குவிதிகளுக்கமைய எவ்வித பணிக்கொடைக்கும் தகுதியுடையவராகார்.

(5) 6 வது ஒழுங்குவிதியில்—

"எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக இவ்வொழுங்குவிதிகளுக்கமைய பணிக்கொடை பெற தகுதியுடைய எந்த உத்தியோகத்தரோ அல்லது சேவையாளரோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(6) 8 வது ஒழுங்குவிதியில்,—

(அ) "நிதியிலிருந்து 15,000/ அல்லது ஒரு தொகை" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக "நிதியிலிருந்து ஒரு தொகை" என்ற சொற்றொடர்களை இடுவதன் மூலமும்.

(ஆ) "அந்த ஆண்டில்.........., எந்த தொகை கூடுதலாக இருக்கின்றதோ" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக "அந்த ஆண்டில்" என்னும் சொற்களையிடுவதன் மூலமும்,

(7) பின்வரும் புதிய ஒழுங்கு விதியை புகுத்துவதன் மூலமும்—

"8 (அ) பின்வருபவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டியனவாய் பணிக்கொடை நிதிக்கணக்கில் தேங்கிக் கிடக்கும் எத்தொகைகளும் திரும்பவும் றப்பர் கட்டுபாட்டு நிதிக்கு மாற்றப்படலாம்—

(1) வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிராவிடின்,

(2) மரணமடைந்த உத்தியோகத்தரின் ஆதரவில் வாழ்பவருக்கு அத்தகைய மரணமடைந்த உத்தியோகத்தர் எவரேனும் அண்டிவாழ்பவரை விட்டுச் சென்றிருப்பின்,

(3) இறப்பர் கட்டுப்பாட்டு இலாகாவில் ஆற்றுகின்ற முழு சேவைக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு, இளைப்பாற்றுச் சம்பளம்பெற தனது விருப்பத்தை தெரிவுசெய்து கொண்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வுத்தியோகத்தர் அவ்விதம் தம்விருப்பத்தைத் தெரிந்திராவிடின்.

11–1149/4.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.